REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ❀ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 10உ திங்கள் (24—12—56) ★ ★ வெளியூர்: மார்கழி 11உ செவ்வாய் (25—12—56) [இதழ் 169

3,283 தொகுதிகளாம்!

புதுடில்லி, டிச 22—

தொகுதி நிர்ணயக் குழுவின் இறுதி அறிக்கை மக்கள் சபையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

எல்லா மாநிலங்களுக்குமாக 3,288 தொகுதிகள் உள்ளன; அதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 470 தொகுதிகளும், மலைசாதியினருக்கு 221 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை மாநிலத்திற்கு சட்டசபை உறுப்பினர் எண்ணிக்கை 206; அதில் 37 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தத் தொகுதிகள் 167; இதில் 129 ஒரு உறுப்பினர் தொகுதிகள்; 38 இரு உறுப்பினர் தொகுதிகள்.

கழகத் தோழர்களிடம் இருக்க வேண்டிய குண நலன்கள்

பொறுமை வேண்டும்! கோபம் கூடாது!

சலிப்படையாதீர்! வேதனை கொள்ளாதீர்!

'சட்டசபைக்குச் சென்றால் என்னசெய்வீர்' என கேள்வி எழுப்புவோருக்கு அண்ணா பதில்

"தேர்தலுக்கு மட்டுமல்லாமல் எப்போதுமே கழகத் தோழர்களுக்கு 4 முக்கியக் குணங்கள் இருக்க வேண்டும்; ஒன்று—எதையும் சகித்துக்கொள்ளும் பொறுமைக் குணம்; மற்றது—எதற்கும் கோபம் கொள்ளாமல் இருப்பது; இன்னொன்று—எதற்காகவும் சலித்துக் கொள்ளாமலிருப்பது; நான்காவது—எதற்கும் வேதனைப் பட்டுக்கொள்ளாமலிருப்பது.

"இந்தக் குணம் உங்களுக்கு இருக்க வேண்டுமென்பதற்கு நான் கூறும் காரணம், மாற்றுக் கட்சியினர் நம்மை வசைபாடுவதில் ஈடுபட்டால் நாம் அதனால் ஆத்திரமடையாமல், நமது கழகம் வளர வேண்டும் என்று நினைத்து உழைத்துக் கழகத்தின் வெற்றிக்குப் பாடுபட வேண்டும் என்பதற்காகத்தான்"

—என்று, 21-12-56-ல், சென்னை-கீழ்ப்பாக்கம் 22-வது வட்ட தி. மு. கழக 4-வது ஆண்டு விழாவில் பேருரையாற்றுகையில், அண்ணா அவர்கள், கழகத் தோழர்களின் கடமை பற்றிக் குறிப்பிட்டார்.

வெற்றிக்கு உறுதி

"சரி, உழைக்கிறோம்; ஆனால் வெற்றிகிட்டுமா — என்று வேண்டுமானால் என்னைக் கேளுங்கள். நீங்கள் அப்படி உழைத்தால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்பதை உறுதியாகக் கூறுவேன். நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துதான் கூறுகிறேன் இதை!

"நம்மீது என்ன குறை இருக்கிறது? நமது துணைப் பொதுச்செயலாளர் நடராசன் என்ன—கள்ளமார்க்கெட் வியாபாரியா? அண்ணாதுரை என்ன — அநியாய வட்டி வாங்கிப் பிழைப்பவரா? நம்மீது மாற்றுக் கட்சியினர் கூறும் குறை என்ன? அவர்களெல்லாம் நல்லவர்கள்தான்; ஆனால் எங்களிடம் இல்லையே—அதுதான் குறை என்று கூறுகிறார்கள்! இவர்களிடமிருக்கும் சரக்கு எங்களிடம் இல்லையே என்றுதான் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்! அந்த நயம் சரக்கு உங்களிடம் இருக்கும்போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

"ஒரு சிலர் நம்மைப் பார்த்து, 'இவர்களெல்லாம் சட்டசபைக்குப் போகவேண்டுமா?' என்று கேட்கின்றனர்; சட்டசபையே வேண்டுமா வேண்டாமா என்று அவர்கள் கேட்டால் நாமும், 'வேண்டாம்' என்று சொல்லுவோம்! சட்டசபை என்று ஒன்று இருந்து, அங்கே செல்லத் தேர்தலும் நடத்தி, அத்தேர்தலில் எல்லாக் கட்சிகளும் ஈடுபடுவதையும் கண்டும்கூட, நம்மை, 'ஏன் சட்டசபைக்குப் போக வேண்டும்?' என்று கேட்கின்றனர். திராவிட நாடு பிரச்சினை சட்டசபையில் நுழைந்துவிடுவதால் மட்டும் முடியாதென்று கூறுபவர்கள், சட்டசபையே வேண்டாம் என்று சொல்லட்டுமே! அங்கே செல்லத் தேர்தலும் நடத்த வேண்டாம் என்று சொல்லட்டுமே!

"சட்டசபையும் இருக்கும்; தேர்தலும் நடக்கும்; அந்தச் சபையில் தெளிவற்ற எத்தனையோ பேர் இடம் பெறலாம்; ஆனால் நாம் மட்டும் இடம் பெறக் கூடாது என்றால், அது என்ன நியாயம்?

காரியசாதனைக்கே!

'நாங்கள் தேர்தலில் ஈடுபட்டு சட்டசபைக்குச் செல்வது காரியசாதனைக்குத்தான்; ஏனென்றால், அது காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடிந்த இடம்; அங்கே பலரும் போவார்கள்; அந்த இடத்தில் நாங்களும் போனால், உங்களுக்காகவும் போராடுவோம்; நீங்கள் எந்த அளவுக்கு எங்களை அனுப்புவீர்களோ அந்த அளவுக்கு நாங்கள் காரியங்களைச் செய்வோம்.

என்ன செய்வோம்?

"நாங்கள் சட்டசபைக்குப் போய் விட்டால் 'என்ன செய்துவிடுவார்கள்' என்று கேட்கின்றனர்! நாங்களென்ன ஜோதிடர்களா?—பிறக்கும் குழந்தை 'ஆணா பெண்ணா' என்றுகூற? பிறக்கிற குழந்தை நோஞ்சான் குழந்தையாக இருந்தால் அதற்குத் தேவையான பாலூட்டுவோம்; சட்டமேஸ்தான குழந்தையாக இருந்தால் அது காரியமாற்றும்! எனவே சட்டசபையில்போய் என்ன செய்ய முடியும் என்று கேட்கப்படும் கேள்வி அர்த்தமற்றது.

"சட்ட சபைக்குப்போனால் நாங்கள் என்ன செய்வோம்? மற்றவர்கள் செய்யமுடியாததை எல்லாம் செய்வோம்!

"கம்யூனிஸ்டுகள் என்ன சொல்வார்கள்? ஏழை மக்கள் படும்துயரத்தை எடுத்துரைப்பார்கள்; முதலாளிகள் இழைக்கும் கொடுமைகளை விளக்குவார்கள்; பொதுவுடமைத் தத்துவத்தை ஒருமுறைபேசுவார்கள். ஆனால் தனிநாடு அமைப்புப்பற்றி எதுவுமே பேசமாட்டார்களே? இராமமூர்த்தியும், ஜீவானந்தமும் தனி நாடு பற்றிப் பேசிக்கொண்டிருக்கமாட்டார்கள். இப்படித்தான் மற்றக் கட்சியிலிருப்பவர்களும்!

இந்த நாடு

"ஆனால் நாங்கள்? 'இந்த நாடு பழம்பெரும் நாடு; இந்த நாட்டை மூன்று பக்கமும் கடல் சூழ்ந்திருப்பது பூகோளப் படத்தைப் பார்த்தால் புரியும்; இங்கு எத்தனையோ துறைமுகங்கள் இருந்தன; அவைகளெல்லாம் இப்போது தூர்ந்துபோய்விட்டன; அவை தூர்ந்து போகாததற்கு முன்னே, அங்கிருந்து பாய்மரக் கப்பல்களிலேறி இந்த நாட்டு வியாபாரிகள் காட்டிலே கிடைக்கும் சந்தனத்தையும், கடலிலே மூழ்கி எடுத்த முத்தையும் ஏற்றி யவனத்திற்கும், கிரேக்கத்திற்கும் சென்றுவிற்று அங்கிருந்து தங்கத்தைக் கொண்டுவந்து இங்கு சிறப்பாக வாழ்ந்தனர். ஆனால் இன்று, பாய்மரக் கப்பல்களுக்குப் பதிலாக நீராவி கப்பல்களை வைத்துக்கொண்டு அவைகளில், எங்கள் உடன்பிறந்தவர்களாய், இரத்தத்திற்கு இரத்தமாய் இருந்து வரும் தொழிலாளர்களைக் கூலி வேலைக்காகப் பர்மாவுக்கும், சிலோனுக்கும் அனுப்பும் கேவல நிலை ஏற்பட்டுள்ளது' என்ற உண்மையை எடுத்துக் கூறுவோம். தொழிலாளர்களும் நடுத்தர மக்களும் நமது தாயகமும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். அதற்காக தி. மு. கழகம் போராடும்.

"மற்றக் கட்சிகளெல்லாம் மனிதரின் கண்ணீர்ப் பற்றிப் பேசும்போது, நாங்கள் தமிழர்கள் சிந்தும் கண்ணீர் பற்றிப் பேசுவோம்.

"இப்போது சொல்லுங்கள்—நாங்கள் சட்டசபைக்கு அனுப்பப் பட வேண்டியது அவசியமா—இல்லையா—என்று?

"ஆகவே, இவைகளெல்லாம் நீங்கள் ஆர அமர யோசித்து தேர்தலில் போராதரவு தரவேண்டுகிறோம்.

"மற்றக் கட்சியினரால் செய்ய முடியாததையெல்லாம் நாம் செய்ய முடியும் என்பதால், தோழர்கள் மேலும் மேலும் உற்சாகத்தோடு பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்."

***********-****-***

ரூ. 501!

23-12-56 அன்று பூங்கா நகர் தி. மு. க. கூட்டத்தில் தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் (வேதாசலம்) அவர்களின் அன்னையார் எஸ். ஜி. வள்ளியம்மாள் அவர்கள் சார்பில் தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் தேர்தல் நிதிக்கென மனமுவந்து ரூ. 501 அண்ணா அவர்களிடம் அளித்தார்கள்.

****-****-*********

பொதுத்தேர்தல் வருகிறது

கம்யூனிஸ்டு கல்யாணசுந்தரம் கைதாகிறார்

சென்னை, டிச. 22—

போலீஸ் கமிஷனரால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவை மீறியதற்காக, கம்யூனிஸ்டு கல்யாணசுந்தரம், மவுண்ட் ரோடில் 22—12—56 காலை 11 மணிக்குக் கைதானார்.

ஸ்டாலின் முறை மீண்டும் உயிர் பெறுகிறது!

புடாபெஸ்ட், டிச. 24—

ஸ்டாலின் காலத்தில், ஹங்கேரியில் ஆயிரக்கணக்கான மக்களை எவ்வித விசாரணையுமின்றி சிறைக்குள் தள்ளிப் பூட்டிவைப்பது வழக்கமாக இருந்து வந்தது.

அங்கேரியின் பிரதமராக நாகி தேர்ந்தெடுக்கப்பட்டதும், இந்த கொடிய — கேவலமான வழக்கத்தை ஒழித்துக்கட்டினார்.

அந்த வெறுக்கக்கூடிய பண்டைய ஸ்டாலின்முறை மீண்டும் அங்கேரியில் உயிர் பெற்றிருக்கிறதாம்!

"பொது மக்களுக்குப் பாதகமான நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களும், உற்பத்தியைத் தடை செய்பவர்களும் விசாரணையின்றி பாதுகாப்புக் கைதியாகச் சிறையில் வைக்கப்படுவர்" என்று ரஷ்ய ஆதிக்கத்தின்கீழ் உள்ள அங்கேரிய பொம்மை அரசாங்கத்தின் 'ஜெஜட்' அறிவித்திருக்கிறதாம்!

இதற்குமுன், சிறையிலுள்ள பாதுகாப்புக் கைதிகள் மீது 30 நாட்களுக்குள் வழக்குத் தொடரப் படவேண்டும் என்ற முறை இருந்தது; அது இப்போது ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

பீடித் தொழிலாளர் போராட்டம்

77 பேர் கைது

சென்னை, டிச. 22—

பீடித் தொழிலாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருவதில் சென்னை அரசாங்கம் அக்கறையற்று இருப்பதைக் கண்டிப்பதற்காக பீடித் தொழிலாளர்கள், சட்டசபைமுன் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது மொத்தம் 77 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேலத்தில் செயற்குழு, பொதுக்குழு கூட்டங்கள்

"29—12—56 பிற்பகல் 2-மணிக்கு, தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம், சேலம் செண்டிரல் டாக்கிசுக்கு எதிரில் உள்ள தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

"30—12—56 காலை 10-மணிக்கு, அன்னதானப்பட்டி (27-வது வட்டம்) பிட்டா ரைஸ் மில்லில் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

"அந்த ரைஸ் மில்லிலேயே, எல்லா உறுப்பினர்களுக்கும் தங்கவும் குளிக்கவும் நல்ல முறையில் வசதி செய்யப் பட்டிருக்கிறது

"செயற்குழு உறுப்பினர்களுக்கும், பொதுக் குழு உறுப்பினர்களுக்கும், காலை, பகல், மாலை, இரவு உணவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

"ஜோலார்பேட்டை வழியாகச் சேலம் வருகிறவர்கள் சேலம் சந்திப்பு இரயில் நிலையத்தில் இறங்க வேண்டுகிறோம்.

"விருத்தாசலம் வழியாக வருகிறவர்கள் சேலம் மார்க்கட் இரயில் நிலையத்தில் இறங்க வேண்டுகிறோம்.

"கூட்டங்களில் கலந்து கொள்ள வரும் உறுப்பினர்களை, இரயில் நிலையங்களிலிருந்து கழகத் தோழர்கள் அழைத்துச் செல்வார்கள்.

"பஸ் மூலம் வருகிறவர்கள், பஸ் ஸ்டாண்டில் இறங்கினால் அங்கிருந்தும் கழகத் தோழர்கள் அவர்களை அழைத்துச் செல்வார்கள்.

"பொதுக்குழு நடைபெறும் ரைஸ் மில்லில் டெலிபோன் அமைக்கப்பட்டிருக்கிறது. (டெலிபோன் எண். 544).

"செயற்குழு, பொதுக் குழுக் கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் ஒழுங்குபெற நடைபெற்று வருகிறது.

"30—12—56 மாலை 6-30 மணிக்கு 'வி' மார்க்கெட்டில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்."

என்று, சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

நம் நாடு
தி. மு. கழகத்தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—12—'56 திங்கள்

காங்கிரஸ் தேர்தல் வியாபாரம்!

தேர்தல் நெருங்க நெருங்க தங்கள்மீது தமிழ் மக்களுக்கு வளர்ந்தோங்கியுள்ள எதிர்ப்பைக் குறைத்துக்கொள்ளும் முயற்சியில் காங்கிரசு ஆளவந்தார்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். எப்படியாவது தமிழ் மக்களின் ஆதரவை மீண்டும் பெற்றுப் பதவியில் அமரும் நோக்கத்துடன்தான் இத்தகைய நடைமுறையை மேற்கொண்டுள்ளனர் எனக் குறிப்பிடுவது, இல்லாததைக் கூறினதாகவோ, உள்ளதை மிகைபடக் குறிப்பிட்டதாகவோ ஏற்பட்டுவிடாது.

சென்னை அமைச்சரவையினர் அளித்துள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டத்திலேயே, தமிழ் மக்களை மயக்கப் பார்க்கும் 'தேர்தல் தளுக்கு' தெளிவாகத் தெரியலாயிற்று. தேர்தல் நேரத்தில் புது வரி போட்டுப்பொதுமக்கள் சீற்றத்திற்கு மேலும் பாத்திரமாகாமல் இருக்க வேண்டும் என்ற கருத்தில்தான், துண்டுவிழும் ரூபாய் ஐந்து கோடியை ஈடு செய்யாது அப்படியே விட்டுவிட்டது இந்த அமைச்சரவை.

அதுவுமன்றி, பழங்குடி மக்களுக்கு அளித்துவந்த அரசாங்க சலுகைகளைக் கிறித்துவ மதம் மாறிய பழங்குடி மக்களுக்குத் தரவே முடியாது என இதுவரை பிடிவாதம் பேசிவந்த காங்கிரசு அமைச்சரவை, எதிர்பாராவகையில் அப்போக்கைக் கைவிட்டு, கிறித்துவர்களாக மதமாற்றம் பெற்றுள்ள பழங்குடி மக்களுக்கும் அரசாங்கச் சலுகைகள் வழங்க வலிய முன்வந்து இருக்கிறது. கிறித்துவப் பழங்குடி மக்களின் அன்பும் ஆதரவும் தேர்தலில் தங்கள் கட்சிக்கே கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான், இச்சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது முக்காலும் உண்மையாகும்.

இதுவரை மறுத்துவந்த அரசாங்கச் சலுகைகளை, மதம் மாறிய பழங்குடி மக்களும் பெற உரிமையுண்டு என்ற நியாயத்தை ஒப்புக்கொண்டு, கொள்கை அடிப்படையில் மனமாற்றம்பெற்று, இச்சலுகைகளை மதம்மாறிய பழங்குடி மக்கள் அனைவருக்கும் தந்துதவ, இப்பொழுதும் காங்கிரஸ் அமைச்சரவை முன்வரவில்லை. மதம் மாற்றம் பெற்றுள்ள கிறித்துவ பழங்குடி மக்களுக்கு மட்டுந்தான் அச்சலுகைகளைக் கொடுக்கக் காங்கிரஸ் ஆளவந்தார்கள் தீர்மானித்துள்ளனர்.

எம்மதத்தைப் புகுந்தவர்களாக இருந்தாலும் அரசாங்கத்தினிடமிருந்து சலுகைகள் பெறும உரிமை பழங்குடி மக்களுக்கு இருந்தாகவேண்டும. அவ்வுரிமையை ஒரு பொது நியாயமாக ஏற்றுக்கொள்ளக் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு விருப்பமில்லை என்பதைத்தான அவர்களுடைய புதிய போக்கு உறுதி செய்வதாக இருக்கிறது.

எனவே, காங்கிரசு ஆளவந்தார்களின் இச் சலுகை அளிப்பை, ஒரு தேர்தல் கால வியாபாரமாகத்தான் கொள்ள வேண்டும். கிறித்துவப் பழங்குடி மக்களும் அப்படித்தான் கொள்வர் என்பதில் ஐயமில்லை.

காங்கிரசு ஆளவந்தார்களின் போக்கைத் தெரிந்திருக்கும் கிறித்துவப் பழங்குடி மக்கள், தங்களுக்கு இப்பொழுது தர முன்வரும் அரசாங்கச் சலுகைகளை ஒரு நிரந்தர ஏற்பாடு என நம்பமாட்டார்கள். தேர்தல் முடிந்த பிறகு, தங்களுக்கு இச்சலுகைகளைத் தர என்றும் போல் காங்கிரசு ஆளவந்தார்கள் மறுத்தாலும் மறுக்கக் கூடும் என்று கிறித்துவப் பழங்குடி மக்கள் எண்ணுவது எதிர்பார்க்கக்கூடியதே. நிற்க,

கிராம மணியக்காரர்களுக்கும் மற்ற அரசாங்க ஊழியர்களுக்கும் பிரயாணச் செலவு போன்றச் சலுகைகளைத் தர, இப்பொழுது காங்கிரஸ் ஆளவந்தார் முன்வந்து இருப்பதும், கடைந்தெடுத்தத் தேர்தல் வியாபாரமேயாகும் என்பதில் ஐயமில்லை. இச்சலுகைகளை அவ்வூழியர்கள் பல்லாண்டுக் காலமாகவே கோரிவந்துள்ளனர். இத்தனை ஆண்டுக் காலமாகக் காங்கிரஸ் ஆளவந்தார்கள் மேற்படி சலுகைகளை மேற்படி ஊழியர்களுக்குத் தராமல் காலத்தைக் கழித்துவந்தவர்கள், இப்பொழுது ஏன் தர முன்வந்தனர் என்ற கேள்வி நியாயமானதேயாகும். இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடைதான் தேர்தல் வியாபாரம் என்ற பதிலாகும்.

எல்லாவற்றிலும் சிறப்புப் பெற்று விளங்குவதாக உள்ள தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஏற்கக்கூடிய ஒரு சட்டத்தை இயற்ற இப்பொழுது காங்கிரசு அமைச்சரவை முன்வந்திருக்கிறது. தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமே என்ற அக்கரை காலந்தாழ்ந்த ஒன்றாக இருந்தபோதிலும், இப்பொழுதாவது இந்த நல்ல ஏற்பாட்டைச் செய்ய காங்கிரசு ஆளவந்தார்கள் முன்வந்தது, தமிழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிதரக்கூடும்.

தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஏற்கவேண்டும் என்று, ஏறத்தாழ இரண்டாண்டுக்கு முன்னரே ஒரு தீர்மானத்தை முன்னாள் நீதிபதி திருவாளர் கெஜபதியார் அவர்கள் சென்னை மேல் சபையில் கொண்டுவந்தார். அப்பொழுது அதைஏற்கக் காங்கிரசு அமைச்சரவை மறுத்துவிட்டது.

ஆனால் இப்பொழுதோ தமிழை ஆட்சி மொழியாக்க சட்டமியற்ற அதே காங்கிரஸ் அமைச்சரவை முன்வந்திருக்கிறது. தமிழை ஆட்சிமொழியாக்குவதின்மூலம் கிடைக்கக் கூடிய பெருமை முழுதும் தங்களுக்கே இருக்க வேண்டும என்ற நினைப்பில்தான், காங்கிரசு அமைச்சரவை இப்பொழுது அதைச் செய்ய முன்வந்து இருக்கிறது எனக் குறிப்பிடுவது உண்மைக்கு மாறானதல்ல.

காங்கிரசுத் தேர்தல் வியாபாரத்தில் இதுவும் ஒன்றாகும் என்பதைத் தமிழ் மக்கள் மறந்துவிடமாட்டார்கள். தங்கள் தாய்மொழிக்குரிய சிறப்பைப் பெற விழைவது தமிழ் மக்களின் பிறப்புரிமையாகும். எனவே, தமிழ் மக்கள் பிறப்புரிமையைப் பெறுவதில்கூட, இந்தக் காங்கிரசு ஆளவந்தார்களிடம் எவ்வளவு துன்பப்பட வேண்டியதாக இருந்திருக்கிறது என்பதை, தமிழை ஆட்சி மொழியாக்கச் சட்டமியற்றப்படும் இந்தத் தருணத்தில் எண்ணிப்பார்க்க வேண்டியது தமிழ் மக்களின் நீங்காக் கடமையாகிறது.

நம் நாடு நமதானால்......!

பிரச்சினைகளைச் சுலபமாகத் தீர்க்கமுடியும்

தொழிலாளருக்கு என். வி. என். தரும் விளக்கம்

20—12—56ல் சென்னை—நேப்பியர் பார்க் மைதானத்தில் சிம்சன் குரூப் நிறுவனத் தொழிலாளர் சார்பில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்பு விழாக் கூட்டத்தில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆற்றின சொற்பொழிவின் ஒரு பகுதி முன்னர் தரப்பட்டுள்ளது; மறு பகுதி இங்கு தரப்பட்டிருக்கிறது :—

"பாட்டாளி மக்களுக்கு நாங்கள் கூற ஆசைப்படுவதெல்லாம், அவர்கள் தங்களுக்குரிய உரிமைகளையெல்லாம் பெற்று வாழவேண்டுமானால் இந்த நாடு தனிநாடாக வேண்டும்; நமது நாடு நமதானால் எல்லாப் பிரச்சினைகளையும் நம்மால் சாதாரணமாகத் தீர்த்துக் கொள்ளமுடியும்.

"நாம் இப்படிக் கூறும்போது, மாற்றுக் கட்சியினர் நம்மைப் பார்த்து, 'இவர்கள் பிரிவினை மனப்பான்மை கொண்டவர்கள்; நாட்டின் நாசகாரர்கள்' என்று சீறுகின்றனர் கடந்த தேசியப் போராட்டத்தில் பாட்டாளிகள் ஈடுபட்டபோது, தேசியத் தலைவர்களெல்லாம் என்ன சொன்னார்கள்? அவர்களுக்குத் தேவையெல்லாம் கூலி உயர்வு ஒன்றுதான் என்றா கூறினார்கள்? 'இந்த நாடு நமதானால்—வெள்ளையர் பிடியிலிருந்து நமது நாடு விடுபட்டால் உங்கள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிடும்; எனவே, பாட்டாளிகளே! தேசியப் போராட்டத்தில் ஈடுபடுங்கள்,' என்றுதான் கூறினர். அந்த நேரத்தில் தொழிலாளர்களும், 'நமது நாடு நமதானால் நமக்கு உரிமைகள் கிடைக்கும் என்று நினைத்துத்தான் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்படி நாட்டு விடுதலைப் பிரச்சினையில்—அரசியல் பிரச்சினையில் பெரும் பங்கு கொண்டவர்கள் தொழிலாளர்கள்தான் என்பதை இந்த நாட்டின் தேசிய வரலாறே எடுத்துக் காட்டுகிறதே!

"அப்படிப் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி கண்டு சுதந்திரம் பெற்று 9 ஆண்டுகள் ஆன பிறகும் இன்றுவரை தொழிலாளர்களுக்குக் கிடைத்திருக்கிற நன்மை என்ன? கிடைத்த சுதந்திரம் இதுவரை அவர்களுக்குப் பயன்பட்டதில்லையே?

"நாட்டிலே தினம் தினம் விலைவாசிக் கொடுமைகளைப் பாட்டாளிகள் அனுபவித்தாக வேண்டிய நிலையில் அல்லவா இன்று இருக்கிறார்கள்? இப்படி அவர்கள் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையில் இரண்டறக் கலந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களை ஏதோ தனிப் பிறவிகள் என்று யாராவது கூறினால் அவர்கள் நிச்சயமாகத் தொழிலாளருக்குத் துரோகிகள் என்பதைத் தவிர வேறு என்ன கூறமுடியும் என்று கேட்கிறேன்

"தொழிலாளர்களுக்குக் காங்கிரஸ் நன்மை செய்திருக்கிறது; எனவே காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள் — என்று கேட்பதை விட வேறு துரோகம் இருக்கமுடியுமா? இப்படியெல்லாம் பேசித் தொழிலாளர்களைத் தவறான பாதைக்குத் திருப்பிவிடுகிறார்கள், தத்துவார்த்தம் பேசித் திரிகிறார்கள் சிலர்!

"ஆமதாபாத்திலுள்ள தொழிலாளர்கள் மாநில, மொழி உணர்ச்சி

(5-ம் பக்கம் பார்க்க)

செங்கற்பட்டுமாவட்டத்தில் ஒரு ஆட்டுப் பண்ணை

சென்னை, டிச. 24—
செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு ஆட்டுப் பண்ணை நிறுவுவதற்கான துவக்கச் செலவுகளுக்காக ரூ. 50 400 மானியம் வழங்குவதென சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் துவக்கப்படும் இந்தப் பண்ணைக்கு மொத்தம் ரூ 2,50,000 செலவாகும் என்றும் கூறப்படுகிறது.

இந்தப் பண்ணை நிறுவுவதற்காகக் காட்டுப்பாக்கம் 'ரிசர்வ்' காடுகளில் 500 ஏகர் வரை ஒதுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

சாத்தனூர் கால்வாய்மூலம் தண்ணீர் வசதி

சென்னை, டிச 24—
1957 மார்ச் திங்கள் முடியும் வரை சாத்தனூர் கால்வாய்க்குத் தண்ணீர் வசதியளித்து உற்பத்தியைப் பெருக்குவதென அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

சென்னை மேல் (சட்ட) சபை உறுப்பினர்கள்

எண்ணிக்கை 63-ஆக உயர்த்தக் கோரிக்கை

சென்னை, டிச. 24—
சென்னை மேல் (சட்ட) சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 50-ஆக இருப்பதை 63-ஆக உயர்த்தவேண்டும் என்று, டில்லி சர்க்காருக்குச் சிபாரிசு செய்கிற தீர்மானம் ஒன்றை சென்னை மேல் (சட்ட)சபை ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறது.

சட்டசபை, மற்றும் ஸ்தல ஸ்தாபனத் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒவ்வொரு தொகுதிக்கும் 21 இடங்கள்; பட்டதாரிகள், மற்றும் ஆசிரியர்கள் தொகுதி ஒவ்வொன்றிற்கும் 6 இடங்கள்; நியமனம் செய்யப்படுவதற்கு 9-இடங்கள் — என்று, அந்த 63-இடங்களும் பிரிக்கப்பட வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டிருக்கிறது.

ஹங்கேரியில் சோவியத் தலையீட்டின் எதிரொலி

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு கட்சிக்குத் தலைமுழுக்கு

பிரிட்டனிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்து வெளியேறும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. வர்த்தகத்துறைச் சங்கங்களிலும், கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னோடிகளாகவும் இருக்கும் பல முக்கியமான தலைவர்களும் உறுப்பினர்களும் அக்கட்சிக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டுத் தங்கள் செய்கைக்கான காரணங்களையும் கூறியிருக்கின்றனர்.

அப்படி வெளியேறினவர்களில், அகருள்ள நெருப்பணைக்கும் படைச் சங்கத்தின் பொதுச்செயலாளரும், துணைப் பொதுச்செயலாளரும் அடங்கியிருக்கிறார்கள்.

அந்தச் சங்கத்தின் துணைப் பொதுச்செயலாளரான கிரஹால் என்பார், தம்முடன் இ. டி. யூ.-வினுள்ள லெஸ்லி கானன் என்பாரையும், நெருப்பணைக்கும் படையைச் சேர்ந்த வியோகிலே என்பாரையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு, தாங்கள் கட்சியைவிட்டு வெளியேறுவதை அறிவித்த அதே நேரத்தில், அந்தக் கட்சியே முழுமைக்குமாகக் கலைக்கப்பட்டுவிட வேண்டும் என்ற ஆலோசனையும் கூறியிருக்கிறார்!

இவர்களைப் போலவே, சுரங்கத் தொழிலாளர் தேசியச் சங்கத்தின் மிலாதியா மாவட்டச் செயலாளரான அலக்ஸ் மோபட் என்பவரும் 'கட்சியின் கொள்கையாலும், நடவடிக்கைகளாலும், முறைகளாலுமேதான் கட்சியைவிட்டு நாங்கள் விலகுகிறோம்' என்று கூறியிருக்கின்றார்.

ஜாக் லின்ட்சே என்ற ஒரு பிரபல கம்யூனிஸ்டு நாவலாசிரியர், 'டெய்லி ஒர்க்கர்' இதழுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில், ஹங்கேரிப் பிரச்சினையில் ரஷ்யத் தலையீட்டை முழுக்க முழுக்கக் கண்டித்திருக்கிறார்.

அந்தக் கடிதத்தில், 'பிரிட்டனில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சியினர், இந்த நாட்டு மக்களுக்கும் மனிதத் தன்மைக்கும் எதிராக வேண்டுமென்றே திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றனர்' என்று குற்றம் சாட்டியிருக்கிறார்!

அவர் மேலும், 'சமாதானத்திற்கும் சோஷலிசத்திற்கும், அகில உலக நடவடிக்கைகளுக்கும் பேரிடியாக இருக்கும் இந்தக். குழப்பமான நிலைமைகளின் விளைவு என்னவாக இருக்கமுடியும் என்பதை எண்ணிப்பார்ப்பதுகூட மிக மிகச் சிரமமானது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இவரைத் தொடர்ந்து, டோகர்தி என்றவர் — வெகு அண்மையில் ஒரு கம்யூனிச ஆதரவான நாவல் எழுதினவர்—இப்போது அக்கட்சியிலிருந்து தாம் விலகிக் கொண்டதாக அறிவித்திருக்கிறார்.

தன் இராஜினாமாவைச் சமர்ப்பித்த அவர், 'நெப்போலியன் கால யுத்த வெறிச்செயலுக்குப் பின்னர் இப்போது மீண்டும் நடைபெறுகிற ஒரு காட்டுமிராண்டித்தனமான செய்கையாகும், ஹங்கேரிமீது மேற்கொண்ட 'ரஷ்யத் தாக்குதல்' என்று குறிப்பிட்டுவிட்டு, 'இந்த நிகழ்ச்சிகள் குறித்து, அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொறுப்பு இருக்கிறது; இந்தக் கோரத்தை இல்லையென்று மறுக்க முன்வருகிற எந்த ஒரு கட்சி உறுப்பினரும், இந்தக் கோர நிகழ்ச்சிகளுக்கு உடந்தையானவராகவேதான் கருதப்பட முடியும்" என்று எழுதியிருக்கிறார்.

வெகு அண்மையில், கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகளை வெகு தீவிரமாக எதிர்த்துவந்த 'ரீசனர்' என்ற இதழின் கூட்டாசிரியர்களான ஜான் சேவில், எட்வர்ட் தாம்சன் என்ற இருவரும் கூட, இப்போது அக்கட்சிக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டனர் தங்கள் கொள்கைகளை அவ்விருவரும் எதிர்த்து வருவதைக் கவனித்த கம்யூனிஸ்டுக் கட்சியின் செயற்குழு அந்தப் பத்திரிகையை 3 மாத காலத்திற்கு வெளியிடக் கூடாதென உத்தரவிட்டு, அவர்களையும் நீக்கிவைப்பதென அறிவித்தது. ஆனால் இதை ஏற்றுக் கொள்ள அவ்விருவரும் மறுத்துவிட்டதுடன் மட்டுமல்லாமல் கட்சியிலிருந்தே வெளியேறி விட்டனர்.

'டிரிபியூன்'—(இலண்டன்)

பெங்களூர் மாவட்டத்தில் க. அன்பழகன் சுற்றுப்பயணம்

9—12—56 காலை 10 மணிக்கு பெங்களூர் மாவட்ட தி. மு. கழக வளர்ச்சிக்காக காந்தி நகர் குப்பி தியேட்டரில் தோழர் எஸ். ஜே உசேன் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. கே. வில்வம் ஆகியோர் கழகத்தின் அரசியல் இலட்சியங்களையும், காங்கிரஸ் ஆட்சியினரின் எதேச்சாதிகாரப் போக்கையும் விளக்கிப் பேசின பின், தோழர் க. அன்பழகன் 'தேர்தலில் நாம்' என்ற தலைப்பில் சீரியதோர் உரை நிகழ்த்தினர் தோழர்கள் சி. பி சிற்றரசு, ஏ. கே. வில்வம் ஆகியோர் உண்டியல் எடுத்துச்சென்று நன்கொடைபெற்றனர். நன்கொடையளித்தத் தோழர்களுக்கு அன்பழகன் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

சொற்பொழிவாளர்கட்கு மாவட்டக் கழகச் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. மாவட்டச் செயலாளர் தோழர் எஸ் வி. பதி வசூலான, ரூ.87-1-3 யும் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென தோழர் அன்பழகன் அவர்களிடம் தந்தார். கூட்டத் துவக்கத்தில், டாக்டர் அம்பேத்கார், தோழியர் விசாலாட்சி-இளம்வழுதி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

இளைஞர் படிப்பகம்

அன்று பகல் 2 மணிக்கு அக்கிப்பேட்டை இளைஞர் படிப்பகத் தோழர்கள் வேண்டுகோளுக்கிணங்க தோழர் க. அன்பழகன், அப்படிப்பகத்தைப் பார்வையிட்டார். தோழர் அன்பழகன் அவர்களுடன் படிப்பகத் தோழர்கள் அமர்ந்து புகைப்படம் பிடித்துக்கொண்டதுடன், தேநீர் விருந்தும் நடத்தினர். படிப்பக நிர்வாகிகளைப் பாராட்டி தோழர் அன்பழகன் சிறிது நேரம் பேசினர்.

திரு. வி. க. மன்ற ஆண்டு விழா

அன்று மாலை $6\frac{1}{2}$ மணிக்கு பெங்களூர் தண்டு திரு வி க மன்ற ஆண்டு விழா, தோழர் டி. எம். வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ கே. வில்வம், சோதிலிங்கம் ஆகியோர் சிறிது நேரம் பேசின பின், தோழர் க. அன்பழகன் அவர்கள் திரு. வி. க. அவர்களின் தமிழ்த் தொண்டை எடுத்துக் காட்டியும், அவரது இறுதிக் காலத்தில் திராவிட நாடு இலட்சியத்தை ஏற்றுக்கொண்டு வலியுறுத்தினதையும் சுட்டிக் காட்டி உரையாற்றினர்.

பிளாக்பள்ளி தி மு. கழகம், மற்றும் பல கிளைகள் சார்பில் தோழர் அன்பழகன் அவர்கட்குக் கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கல்லூரியில்......

10—12—56 மாலை 5 மணிக்கு பெங்களூர் தூய சூசையப்பர் கல்லூரித் தமிழ்ச் சங்கச் சார்பில் திருதண். இ. வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், தோழர் அன்பழகனை வரவேற்றுத் தலைவர் பாராட்டிப் பேசினர். பின்னர் தோழர் அன்பழகன் அவர்கள் தமிழர் சமுதாயம் தாழ்வுற்ற காரணம் பற்றியும், மீண்டும் உயர்வடைவதற்கான வழிவகைகளை எடுத்துக் காட்டியும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் மாணவச் செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்குப் பின் மாணவர்கள், ஆசிரியர்களிடையே அவர் அளவளாவும்போது, 'ஹோம் லண்ட்' ஆங்கில இதழுக்குச் சந்தாதாரராகச் சேரும்படி அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

கிளைக் கழகத் துவக்கம்

அன்று மாலை $7\frac{1}{2}$ மணிக்கு பெங்களூர் இலக்குமிநாராயணபுரம் தி. மு. கழகக் கிளையைத் தோழர் அன்பழகன் துவக்கிவைத்துக் கழகக் கொடியை ஏற்றினர். கழகத் தோழர்களின் பணி குறித்துச் சிறிதுநேரம் சொற்பொழிவாற்றினர்.

பைந்தமிழ் மன்றப் பள்ளி

அன்று இரவு 8 மணிக்கு எரப்பா பிளாக்கில், தி. மு. கழகத் தோழர்களால் நடத்தப்பெறும் பைந்தமிழ் மன்றப் பள்ளியைத் தோழர் அன்பழகன் பார்வையிட்டு, தோழர்கள் பணி குறித்துப் பாராட்டுரை வழங்கினர்.

கோலார் தங்கவயல்

11-12-56 மாலை 6 மணிக்கு தங்கவயல் ஆண்டர்சன்பேட்டை தி. மு. கழகச் சார்பில் உயர்நிலைப்பள்ளி திடலில் தோழர் டி கே. தாமரைவிழியான் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர் அன்பழகன் அவர்களை வரவேற்று தோழர் மா. நெடுஞ்சேரலாதன் சிறிது நேரம் பேசினர். தோழர் எஸ் வி. பதி, தேர்தல் நிதி அளிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்திச் சிறிது நேரம் பேசினபின், தோழர் அன்பழகன் கழகத்தின் இன்றைய வளர்ச்சியையும் அதன் காரணங்களை விளக்கியும், திராவிட நாடு விடுதலைபெற தி. மு கழகம் தேர்தலில் ஈடுபடவேண்டிய அவசியத்தை விளக்கியும் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

பல கிளைக் கழகங்கள் சார்பில் தோழர் அன்பழகன் அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வசூலான ரூ. 20-10-0-ம் தி. மு. கழகத் தேர்தல் நிதியாகக் கிளைக் கழகச் செயலாளர், தோழர் அன்பழகன் அவர்களிடம் அளித்தார். தோழர் அன்பழகன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

குமரவேல் நினைவுச் சின்னம்

★



கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்டு ஆறு மாத சிறைத் தண்டனை அனுபவித்து, சிறை தந்த நோய்க்கு இரையாகிய பஞ்சாலைத் தொழிலாளி—கொள்கை வீரன்—கழகத் தொண்டன் குமரவேலனுக்கு, மணப்பாறையில், கழகத் தோழர்கள்—மக்கள் தந்த காணிக்கையால் எழுப்பியுள்ள நமது வணக்கத்திற்குரிய நினைவுச் சின்னம்தான் மேலே காணப்படுவது.

கழகச் செய்திகள்

புதுப்பட்டு தி. மு. கழகத் துவக்க விழா

9—12—56 மாலை 5 மணிக்கு, தெ. ஆ. மாவட்டம் புதுப்பட்டு தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் என். பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர், கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

குருவிகுளத்தில் தி. மு. க. துவக்க விழா

26—11—56 மாலை 6 மணிக்கு. ரேடியோ திடலில். தோழர் டபிள்யு. டி. துரைசாமி அவர்களால் கழகக் கொடியேற்றுவிக்கப்பட்டது. இரவு 7 மணிக்கு, கோயில் மண்டபத்தில் தோழர் எஸ் சுப்பையா தலைமையில் நடைபெற்ற துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் துரைசாமி, டி. ஆர் சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சங்கரன்கோவிலில் கழகப் பொதுக்கூட்டம்

3—12—56 இரவு 7 மணிக்கு. அண்ணா திடலில், தோழர் சி. எஸ். பழனியப்பன் தலைமையில் நடைபெற்றக் கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் டபிள்யு. டி. துரைசாமி, டி. ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கீழத்திருப்பூந்துருத்தியில் கழகப் பொதுக்கூட்டம்

10—12—56 மாலை 6 மணியளவில் தஞ்சை மாவட்டம் கீழத் திருப்பூந்துருத்தி தி. மு கழகச் சார்பில் தோழர் என். இளமறையன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் என். எஸ். இளங்கோ, நாகராசன், துரை மாணிக்கம், பார்த்திபன், துரை. வையாபுரி ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர். தோழர் இளங்கோ அவர்களுக்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கீழப்பாவூரில் கழகப் பொதுக்கூட்டம்

7—12—56 இரவு 8 மணிக்கு கீழப்பாவூர் பாண்டியன் மைதானத்தில், தோழர் வீ. மா. முத்தரசு தலைமையில் நடைபெற்றக் கழகக் கூட்டத்தில் நூத்துக்குடி தோழர் ஜி. அப்பாசாமி குழுவினரின் 'மந்திரமா — தந்திரமா' நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

எட்டயபுரத்தில் கழகப் பொதுக்கூட்டம்

9—12—56 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு, எட்டயபுரம் மேலவாசலில் தோழர் என். தேவன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ப. பிச்சை, மு சந்தனவேல், ஆ த அர்ச்சுனன், தி. இராமசாமி, எஸ். கலிங்கன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், நியாய விலைக் கடைகளில் உடனடியாக அரிசி போடுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முளையாம்பூண்டி தி. மு. க.

12—12—56ல், தோழர் எம் செல்லமுத்து இல்லத்தில் அவரது தலைமையில் நடைபெற்ற மேற்படி கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கழகத் தேர்தல் நிதி விரைவில் தருவது என்றும், டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செகதேவி — பாகிமானூர் தி. மு. கழகம்

10—12—56ல், தோழர் சு. அருணகிரி இல்லத்தில் தோழர் மு. காவேரி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கார், மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், விரைவில் தேர்தல் நிதி அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நெடும்பலம்பட்டி தி. மு. க.

7—12—56ல் நடைபெற்றக் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், சனவரி 8-வது வாரத்தில் தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் நடத்துவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தாம்பரம் தி. மு. கழகம்

7—12—56 இரவு 7 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 23-12-56ல் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டு, டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

பந்தநல்லூர் தி. மு. க.

7—12—56 மாலை 6 மணிக்கு தோழர் சோமு நெசவு நிலையத்தில் தோழர் பி. ஏ லிங்கன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், தோழர் பி. ஏ. லிங்கன் செயலாளராகவும், தோழர்கள் என். அசோகன், தி. துரைராசன், ஆர். சின்னதம்பி, எஸ். முத்து, டி. எஸ் ஞானம் ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், தேர்தல் நிதி வசூல் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

முக்கூடல் தி. மு. கழகம்

9—12—56 இரவு 9 மணிக்கு கழக மனையில் தோழர் மா. சு. முத்துக்குட்டி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், விரைவில தேர்தல் நிதி அளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆம்பூர் தி. மு. கழகம்

6—12—55-ல் தோழர் டி. எஸ் முனிரத்தினம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: சி. சோமசுந்தரம்; துணைச் செயலாளர்: சி. இராமமூர்த்தி; பொருளாளர்: எம். துரை.

நம் நாடு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

புடன் போராட்டத்தில் ஈடுபட்ட போது அவர்களிடம் போய் உபதேசம் செய்ய முடியாதவர்கள், நாம் ஏதோ இளித்தவாயர்கள் என்று நினைத்துக்கொண்டு நம்மிடம் மட்டும் வந்து தத்துவார்த்தம் பேசுகிறார்கள்.

"இந்த நிலையெல்லாம் மாற, ஒவ்வொரு தொழிலாளியும், 'இந்த நாடு எனது நாடு; இதை வேறு எந்த நாட்டவரும் அடிமைப்படுத்த விடமாட்டேன்; மற்ற நாடுகளையும் நாம் அடிமைப்படுத்த மாட்டோம்' என்ற எண்ணம் பெற்றாக வேண்டும்.

"தி. மு. கழகத்திற்கு மக்கள் சக்தி, ஆதரவு எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் ஒரு சந்தர்ப்பமாகவே தான் தேர்தலைக் கருதுகிறது. தேர்தலில் ஏற்படும் வெற்றி தோல்விதான் தி. மு. கழகத்தின் உயிர்நாடி என்று யாரும் எண்ணி விட வேண்டாம். தேர்தலில் வெற்றிபெற்றாலும் தோல்வியுற்றாலும் கழகம் வாழும். இந்த நாடு நமக்காகும்வரை, நம்முடைய தோழர்களின் கடைசி மூச்சு இருக்கும்வரை, கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரை வாழும்—பணியாற்றும்.

"எனவே, வருகிற பொதுத் தேர்தலில் கழகத் தோழர்கள் எங்கெங்கு நிற்கிறார்களோ அங்கெல்லாம் பொதுமக்களைத் திரட்டி பாட்டாளிகள் கூடுமானவரை தங்கள் ஆதரவைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். தேர்தலுக்குப் பிறகு நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர் பிரச்சினைகளில் ஈடுபடத்தான் செய்யும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்."

பட்டிவீரன்பட்டி தி. மு. க.

11—12—56ல், மீட்பர் டாக்கீசில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தேர்தல் நிதி திரட்டுவதென்றும், வருகிற சனவரித் திங்களில், பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதெனவும், டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேவூர் தி. மு. கழகம்

7—12—56 இரவு 8 மணிக்கு கிளைக் கழகத்தில் தோழர் வி. இ. செயராமன் தலைமையில் நடைபெற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் பொங்கல் விழா கொண்டாடுவது குறித்து முடிவு செய்யப்பட்டது.

புதியம்புத்தூர் தி. மு. க.

10—12—56-ல் தோழர் பெ. துரைசாமி தலைமையில் நடைபெற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் சில மேற்கொள்ளப்பட்டன.

17—12—56 மாலை நாமக்கல்லில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சொற்பொழிவாற்றிக்கொண்டிருக்கிறார். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் கா. பெருமாள் அவர்களும் மேடையில் அமர்ந்துள்ளனர்.

போட்டோ: ரத்னா ஸ்டுடியோ, நாமக்கல்

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு :	ரூ. அ. பை
முன் (21—12—56) இதழ்ப்படி.	31,812—2—1
பம்பாய் தோழர் மா. அண்ணாமலை	3 0 0
நசரேன் காட்டுப்புளி	1 0 0
குணியமுத்தூர் தி. மு. கழகம்	55 0 0
திருநெல்வேலி நகர தி. மு. கழகம் ...	60 0 0
கே. வி. கே. சாமி நினைவு மன்றம் சிந்துபூந்துறை நெல்லை	5 8 0
கொ. க. சின்னத்தம்பி எலுக்காம்வலசு பொன்னிவாடி, தாராபுரம் வட்டம்	50 0 0
ஏம். எம். கருப்பையா, 'திராவிட நாடு' ஏஜெண்டு விருதுநகர்	5 8 0
பி. வி. இராயப்பன் செல்லப்பாறை எஸ்டேட் வால்பாறை ...	10 0 0
வ. தங்கவேலு திருமலைசாமிபுரம் திண்டுக்கல்	2 0 0
தொடையூர் தி.மு. கழகம் காவேரிநகர் திருச்சி	20 0 0
தி. மு. கழகம் நாச்சியார்கோயில்	20 0 0
தி. மு. கழகம் கரம்பக்குடி	40 0 0
ஆக மொத்தம் ரூ.	32,084—2—1

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

கழகக் கூட்டங்கள்

★

சிக்கத்தம்பூர்பாளையம்:
பள்ளிக்கூட மைதானத்தில்
26—12—56 மாலை 5½ மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
கொடியேற்றுபவர் :
து. ப. அழகமுத்து
கழக இல்லத் திறப்பாளர் :
அன்பில்-தருமலிங்கம்

பொதுக்கூட்டம்
தலைவர் : தீ. கோவிந்தராசு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
அன்பில்-தருமலிங்கம்
து. ப. அழகமுத்து

★

தண்டரை (பட்டாபிராம்) :
கே. வி. கே. சாமி திடல்
27—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : கே. எம். பாபு
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
சத்தியவாணி-முத்து
கே. டி. பாலு
த. து. சண்முகம்

மீண்டும் வெளிவருகிறது **'போர்வாள்'** வார வெளியீடு

ஜனவரி முதல்—சனிதோறும் வெளிவரும்

ஆசிரியர் : காஞ்சி—மணிமொழியார்

✱

தோழர் மா. இளஞ்செழியன் தீட்டும் எழுத்தோவியங்கள்; அச்சம் தயை தாட்சண்யமற்ற அரசியல் கட்டுரைகள்; உலகைத் திருத்திய உத்தமர்களின் வரலாறுகள்; தோழர் இராதாமணாளன் எழுதும், தீங்கரும்பு போன்ற தொடர்கதைகள்; தேனாய்—தென்றலாய்—தெள்ளுசுவைத் தீம்பாவாய் இனிக்கும் சிறுகதைகள்; நெஞ்சை அள்ளும் கவிதைகள்—உரையாடல்கள்—கடிதங்கள்—இலக்கிய விளக்கங்கள்—விஞ்ஞானக் குறிப்புகள்

இத்தனையும் உண்டு இதழில்! அத்தனையும் அறிவுக்கு விருந்து! ஆனால் வைதீகத்துக்கு வேட்டு மருந்து!

தனி இதழ் அணா 2 ஆண்டு சந்தா ரூ. 6—8—0

எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை. ஏஜெண்டு நிபந்தனைகளுக்குக் கடிதம் எழுதவும்.

குறிப்பு :—இரண்டு மாதத்துக்கு ஒரு தாள் வீதம் 6 தாள்களில் 10×8 அளவில் ஒவ்வொரு தாளிலும் ஒரு படம் உள்ள 'போர்வாள்' காலண்டர் தயார். விலை அணா 8 ஏராளமான புதுவித பொங்கல் வாழ்த்துக்கள் எங்களிடம் கிடைக்கும். மாதிரி செட் வேண்டுவோர் ரூ 3—0—0 அனுப்பவும்.

'போர்வாள்' அலுவலகம், 128 பிராட்வே, சென்னை-1

பார்க்பேர் பொருட்காட்சி : 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

ரேக்ளா, சைக்கிள், ரிக்ஷா ஓட்டப்பந்தயங்களும் சர்க்கஸ், தந்திரக்காட்சி, பம்பாய்நடனம், ஓவியக்கலை—இன்னும் பல

★

25—12—56 செவ்வாய் மாலை 6 மணிக்கு

சகுந்தலா கலை அரங்கில் நண்பர் நாடக மன்றம் அளிக்கும்

'அதிர்ஷ்ட தேவதை'

தமிழ் சமூக நாடகம்

எம். எஸ். மோகன்—கண்டிராக்டர்

மகளிர் மன்ற விவாத அரங்கு

'25-12-56 மாலை 5-மணிக்கு எண் 77, வரதா முத்தியப்பன் தெருவில் (மன்ற அலுவலக அருகில்) ஓர் கூட்டம் நடைபெறும். அதுசமயம், 'குடும்பச் செலவு யாரால் அதிகம்?—ஆண்களா அல்லது பெண்களா?' என்னும் பொருள்மீது விவாதம் நடைபெறும். மகளிர் மன்ற உறுப்பினர்களும், மற்ற தாய்மார்களும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்"
என்று மன்றத் தலைவர் தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் அறிவிக்கிறார்.

'நினைத்தது நடந்தது'—நாடகம்

25—12—56 மாலை 6 மணியளவில் சென்னை-வண்ணை சர். தியாகராயா கலாமண்டபத்தில், 'தியாகராயர் பைன் ஆர்ட்ஸ் அகெடமி'யினரின் 'நினைத்தது நடந்தது' என்ற நாடகம் நடைபெறும்.

இயேசு பிறந்த நாள் விழா

25—12—56 மாலை 6 மணியளவில் சென்னை - எழுகிணறு, குட்டி மேஸ்திரி தெரு மைதானத்தில் இயேசு பிறந்த நாள் விழா தோழர் பால் கடம்பவனம் அவர்கள் தலைமையில் நடைபெறும். 'இயேசு கிறிஸ்துவும் மக்களும்' என்னும் பொருள்பற்றி சென்னை நகர சபைத் தலைவர் கே. என். சீனிவாசன், தோழர்கள் கண்ணதாசன், முகவை – ஆர். எஸ் பாண்டியன், சி. வி. ஆடலழகன், ஏ. கே. வில்வம், வி. முனுசாமி, எம். சி., ஆகியோர் பேசுவர்.

பல்லாயிரம் மக்களிடை அண்ணா முழக்கம்

22-வது வட்ட தி. மு. க. 4-ம் ஆண்டு விழா

சென்னை, டிச. 22—
சென்னை கீழ்ப்பாக்கம் 22-வது வட்டத் தி. மு. கழக 4-வது ஆண்டு விழா, நேற்று மாலை 6-மணியளவில் சென்னை - கீழ்ப்பாக்கம், கார்டன் ரோடு திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் நெடுஞ்சேரலாதன் முன்மொழிய, தோழர் சி. வெங்கடேசன் வழிமொழிய தோழர் கோ. இளவரசு தலைமை வகித்து, தி. மு. கழகத்தின் கொள்கை கோட்பாடுகளை விளக்கி பொதுத் தேர்தலில் கழக அபேட்சகர்களுக்கு ஆதரவு தருமாறு வேண்டிக்கொண்டும் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து தோழர் ஏ. கே. சாமி அவர்கள் சிறிதுநேரம் பேசினபின், டாக்டர் அம்பேத்கார், திருவாவடுதுறை இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அடுத்துத் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது என்று அறிந்த நாள்முதல் காங்கிரசாரும், குறிப்பாக மந்திரிகளும் எந்தெந்த வகையில் கழகத்தைத் தூற்றித் திரிகின்றனர் என்பதை விளக்கியும், கழகத்தின்மீது அவர்கள் சுமத்தும் அபாண்டமான பொய்புரைகளை எடுத்துக் காட்டியும், ஏழை மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறிக்கொண்டே அவர்கள் வாழ்க்கை நலனைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் காங்கிரஸ் சர்க்கார் போக்கை சுட்டிக்காட்டி, வருகிற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், காங்கிரஸ் சர்க்கார், சென்ற பொதுத் தேர்தலில் மக்களுக்களித்த வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்டதை எடுத்துக் காட்டி இந்தத் தேர்தலிலும் காங்கிரசுக்கு ஆதரவு தருவது துரோகத்தனமாகும் என்று விளக்கிப் பேசினார்.

இறுதியில் அண்ணா அவர்கள், கழகம் தேர்தலில் ஈடுபடுவதின் நிர்ப்பந்தத்தை விவரித்து, பொதுமக்களே கழகத்தைத் தேர்தலில் ஈடுபடச்சொன்னதால், அவர்கள்தான் கழகத்திற்கு வெற்றியும் தேடித்தர வேண்டும் என்பதை வலியுறுத்தியும் சீரியதோர் உரை நிகழ்த்தினார்.

அண்ணா அவர்களுக்கும் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கும் 22-வது வட்டக் கழகச் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

தேர்தல் நிதிக்காக, அவ்வட்டக் கழகச் சார்பில் அண்ணா அவர்களிடம் ரூ. 101 கொடுக்கப்பட்டது. (ந. தி.)

****

சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்களின்

தி. மு. க. தேர்தல் நிதி அளிப்புக் கூட்டமும் கே.வி.கே. சாமி இரவு பள்ளித் திறப்பு விழாவும்

25—12—56 செவ்வாய் மாலை 6-மணிக்கு
ஓட்டேரி-பாஷ்யம் ரெட்டி 3-வது தெருவில்

★

தலைவர் : **கே. சுப்பிரமணி**

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்,

கண்ணதாசன் - - அலமேலு-அப்பாதுரை,

அ. உ. நடராசன், பா. வெங்கடாசலம், எல்லப்பன்

க. வரதன், செயலாளர் — ஆர். கணபதி
திரு.வி.க. மறுமலர்ச்சி மன்றம் — குழுவினர்

****

திருவண்ணாமலையில் 'சந்திரோதயம்'

ரூ. 2,500 நிதி அளிக்கப்பட்டது

திருவண்ணாமலையில், 14—12—56 இரவு நடைபெற்ற 'சந்திரோதயம்' நாடகத்தில், தோழர் ப. உ. சண்முகம் அவர்கள், அண்ணாவிடம் ரூ. 2,500 நன்கொடைத் தொகை அளித்தார்.

நாடகம் நடத்துவதற்காக அதிக நாட்கள் கிடைக்காதிருந்தும், இந்த அளவுக்குத் தொகை திரட்டித் தந்ததற்காக அண்ணா அவர்கள், ப. உ. சண்முகம் அவர்களையும் அவருடைய முயற்சிக்கு துணை நின்ற தோழர்களையும் பாராட்டிப் பேசினார்.

திறந்த வெளி அரங்கில் இதற்கென்றே அமைக்கப்பட்ட அலங்காரக் கொட்டகையில் நாடகம் சிறப்புற நடைபெற்றது.

நாடகத்திலே நல்ல பிரச்சாரக் கருத்துகள் அமைந்திருந்தது மக்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியும் பலனும் அளித்தது.

நாடகம் நடத்தியதன் மூலமாகத் திரட்டப்பட்ட தொகையைத் தந்ததுடன், தலைமைக் கழகத்தின் விருப்பப்படி, மேலும் தேர்தல் நிதி திரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வெற்றிபெற எல்லாத் தோழர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

"உடல் நலக்குறைவுடன் இருக்கும் என் நண்பருக்கு நான் மெத்தவும் சிரமம் கொடுத்துவிட்டேன்; என்றாலும், என்ன செய்வது? இப்போது நாம் மேற்கொண்டுவிட்ட காரியம் எத்தனை அல்லற்பட்டாகிலும் பெரு நிதி திரட்டித் தீரவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டிருக்கிறது. என் நண்பர் ப. உ. சண்முகம், தன் கடமையைக் களிப்புடன், வெற்றிகரமாக நிறைவேற்றியதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்," என்று அண்ணா அவர்கள் கூறினார்.

****

தேர்தல் பிரச்சாரப் பாடல்கள்

இனிய — எளிய மெட்டுகளில்

பிற கட்சிகளைக் கடுமையாகத் தாக்காத
முறையில் — கேவலப்படுத்தாத தன்மையில்

நமது கொள்கை விளக்கம்

கொண்டதாக—

ஐந்தாண்டுத் திட்ட ஓரவஞ்சனையை

விளக்குவதாக—

அடக்குமுறைப் போக்கையும்
சர்வாதிகாரத்தையும் கண்டிப்பதாக
உள்ள

தி. மு. க. தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படத் தக்க பாடல்களை அன்புகூர்ந்து, எழுதி, 'நம் நாடு' இதழுக்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

—'நம் நாடு' அலுவலகம்

****

அம்பேத்கார் மறைவு மௌன ஊர்வலம்

25—12—56 பிற்பகல் 3-மணியளவில், தாம்பரம் கஸ்தூரிபாய் நகரிலிருந்து அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படம் தோழர் கா.மு. நாகரத்தினம் அவர்கள் தலைமையில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

மாலை 5-மணியளவில் தாம்பரம் துரைசாமி ரெட்டியார் மார்க்கெட் மைதானத்தில் அனுதாபக் கூட்டம் தோழர் ஆ. இரத்தினம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் ப. ஜீவானந்தம் எம். எல். ஏ., என். ஜீவரத்தினம் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.